**இலங்கை திறந்த பல்கலைக்கழகம்**

**கல்விப்பீடம்**

**கல்விமாணி (சிறப்பு) ஆரம்பக்கல்வி நிகழ்ச்சித்திட்டம் - 2023/2024**

**இறுதிப்பரீட்சை**

**மட்டம் - 03**

**EPU3235 – கலைத்திட்டக் கற்கையும் செய்கையும்**

**காலம்: இரண்டு (02) மணித்தியாலங்கள்**

**திகதி:- 30.05.2025** **நேரம்: பி.ப 01.30 - பி.ப 03.30**

**பகுதி I இல் அனைத்து வினாக்களுக்கும் பகுதி II இல் ஏதேனும் மூன்று (03) வினாக்களுக்கும் விடையளிக்குக.**

## பகுதி – I

1. "சுற்றாடல்" என்னும் பத்தினை உமது சொந்த மொழி நடையில் வரையறுக்க.
2. சுற்றாடலைப் பாதுகாப்பதில் பாடசாலையின் வகிபங்கினைச் சுருக்கமாக விபரிக்குக.
3. **இரண்டு (02)** பிரதான பூகோளச் சுற்றாடல் பிரச்சினைகளைப் பட்டியலிட்டு அவற்றுக்கு மனிதச் செயற்பாடுகள் எவ்வாறு பங்களிப்புச் செய்கின்றதெனச் சுருக்கமாக விளக்குக.
4. சுற்றாடலின் நிலைபேண் தன்மைக்கு தனியாட்கள் செய்யக்கூடிய பங்களிப்பு **மூன்றினைக் (03)** குறிப்பிட்டு, அவை ஒவ்வொன்றும் எவ்வாறு சுற்றாடலைப் பாதுகாப்பதில் பங்களிப்புச் செய்கின்றதெனச் சுருக்கமாக விளக்குக.
5. சுற்றாடல் சார் செயற்பாடுகள் பாடத்தின் கணிப்பீட்டு முறையின் இயல்புகளை விளக்குக.
6. பூமியின் பல்வேறு பிரதேசங்களின் சூரிய சக்தி பெறும் ஆற்றலின் அளவை அகலாங்கு எவ்வாறு பாதிக்கின்றது என விளக்கி, ஏன் இந்த வேறுபாடு ஏற்படுகின்றது எனக் குறிப்பிடுக.
7. சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் என்ற பாடத்தின் வரலாற்று ரீதியான வளர்ச்சியைச் சுருக்கமாக விளக்குக.
8. ஆரம்பக் கல்வி பயிலும் மாணவர்கள் சுற்றாடலை ஆராய்வதினூடாக பெறும் அனுகூலங்கள் **மூன்றினை (03)** விளக்குக.

**(05 x 08 = 40 புள்ளிகள்)**

## பகுதி – II

9. i. பாடசாலைகள் எதிர்கொள்ளும் பொதுவான சுற்றாடல் பிரச்சினைகள் **நான்கினைப் (04)** பட்டியலிடுக.

**(05 புள்ளிகள்)**

ii. வரலாற்றுப் புகழ் வாய்ந்த நகரமான கண்டி தற்போது கழிவகற்றல் முகாமைத்துவப் பிரச்சனையை எதிர்கொண்டுள்ளது. தலதா மாளிகையில் தற்போது நடைபெறும் புனிதத் தந்தம் வெளிப்பாட்டு விழாவை பார்வையிட ஆயிரக்கணக்கான பக்தர்கள் வருகை தரும் நிலையில் இது ஏற்பட்டுள்ளது. தலதா மாளிகையைச் சூழவுள்ள வீதிகள் பொலித்தீன் பைகள், பிளாஸ்ரிக் போத்தல்கள், உணவுப் பொதிகள் உள்ளிட்ட குப்பைகளால் நிரம்பி வழிகின்றன. நீண்ட வரிசையில் காத்திருக்கும் பக்தர்கள் முறையான குப்பை அகற்றும் வசதிகள் காணப்படாததைக் குறித்து கவலை தெரிவித்தனர். மாநகரசபை அதிகாரியொருவர் கருத்துத் தெரிவிக்கையில் "மக்களில் பலர் நீண்ட காத்திருப்பிற்காக உணவுப் பொருட்களையும் தண்ணீர் போத்தல்கள் போன்ற வேறு பொருட்களையும் கொண்டு வருகின்றனர். ஆனால் வரிசைகள் முன்னோக்கி நகரும் வேளையில் தங்களின் குப்பைகளை அந்த இடங்களில் விட்டுச் செல்கின்றனர்." என்றார்.

(டெய்லி மிரர் 19/04/2025)



53

அ. மேலுள்ள பிரச்சினை இலங்கையில் சுற்றாடலுக்கு எவ்வகையான பாதிப்பினை ஏற்படுத்துகின்றது என விளக்குக.

**(05 புள்ளிகள்)**

ஆ. ஆரம்ப பாடசாலை ஆசிரியரென்ற முறையில் இவ்வாறான பிரச்சினைகளைத் தடுப்பதற்கான மனப்பாங்குகளை உமது மாணவர்களிடம் எவ்வாறு விருத்தி செய்வீர்கள்?

**(10 புள்ளிகள்)**

**10.** "சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் என்னும் பாடமானது ஆரம்பக் கல்வியில் பிள்ளைகளின் புரிதலையும் வளர்ச்சியையும் வடிவமைப்பதில் முக்கிய பங்காற்றுகின்றது."

**i.** "சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள்" என்ற பாடத்தில் காணப்படும், ஒன்றிணைந்த அணுகுமுறைக் கற்றலுக்கான அம்சங்களை விளக்குக.

**(05 புள்ளிகள்)**

**ii.** சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் என்ற பாடத்தினூடாக பிள்ளைகளிடையே விருத்தி செய்ய வேண்டிய இலக்குகளை இனங்கண்டு விரிவாக விளக்குக.

**(07 புள்ளிகள்)**

**iii.** கலைத்திட்டத்தில் காணப்படும் இணைப்பாடங்களுக்கும் சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் பாடத்திற்கும் இடையிலான தொடர்புகளை விளக்குக.

**(08 புள்ளிகள்)**

**11.** "தொடர்பாடலானது, சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் என்ற பாடத்தின் கற்றல்- கற்பித்தலின் மிக முக்கியமான கூறாகும். இது ஆரம்பப் பிரிவு மாணவர்களின் தேர்ச்சிகளை விருத்தி செய்வதில் முக்கிய பங்காற்றுகின்றது."

**i.** சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் என்ற பாடத்தினைக் கற்பிக்கும் சூழ்நிலையில் தொடர்பாடலின் அடிப்படைச் செயற்பாடுகளையும், வரையறைகளையும் பொருத்தமான உதாரணங்களுடன் விளக்குக.

**(06 புள்ளிகள்)**

**ii.** சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் என்ற பாடத்தினூடாக மாணவர்களிடையே விருத்தி செய்யப்பட வேண்டிய தொடர்பாடல் தேர்ச்சிகளை இனங்கண்டு பொருத்தமான உதாரணங்களுடன் விளக்குக.

**(06 புள்ளிகள்)**

**iii.** ஆரம்பப் பாடசாலை மாணவர்களின் தொடர்பாடல் நுட்பங்களை மேம்படுத்துவதில் ஆசிரியரின் வகிபாங்கினைப் பொருத்தமான உதாரணங்களுடன் விளக்குக.

**(08 புள்ளிகள்)**

**12. i.** சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் என்ற பாடத்தினூடாக பிள்ளைகளிடையே விருத்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படும் **ஆறு (06)** கற்றல் பேறுகளைக் குறிப்பிட்டு அவற்றினைச் சுருக்கமான விளக்குக.

**10 புள்ளிகள்)**

**ii.** முன்பிள்ளைப் பருவத்தில் பிள்ளைகள் எவ்வாறு சுற்றாடலை இனங்கண்டு புரிந்து கொள்கின்றனரென விபரிக்குக.

**(10 புள்ளிகள்)**

**13. i.** முறைமைசாராக் கணிப்பீட்டு முறையை எவ்வாறு சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் என்ற பாடத்தில் பயன்படுத்த முடியுமென விளக்குக.

**(08 புள்ளிகள்)**

**ii.** சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் என்ற பாடத்தில் கணிப்பீடு, மதிப்பீட்டினை மேற்கொள்ளும் போது கவனத்தில் எடுக்கப்பட வேண்டிய முக்கிய அம்சங்களை விளக்குக.

**(12 புள்ளிகள்)**

- முழுப்பதிப்புரிமையுடையது -